2020 பிப்ரவரி 20] [*திரு. ப. சத்திய நாராயணன்*]

புன்னகை மன்னன், பூவிழி கண்ணன், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சிம்ம சொப்பனமாய், மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவி அம்மா வழியில் விவசாயிகள், நெசவாளர்கள், மாணவர்கள், மகளிர், பழங்குடியினர் என்று அத்தனை பிரிவு மக்களுக்கான சாமானியர்களின் ஆட்சியை நடத்தி வரும், எதிரிகள் மூக்கின்மேல் விரல் வைத்து வியக்கும் வண்ணம் நயவஞ்சகத்தை வேரறுத்து, நிலையான ஆட்சி நடத்தி வரும் எங்கள் பாசமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு துணை நின்று செயலாற்றி வரும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடன் இணைந்து பணியாற்றிக்கொண்டிருக்கிற அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2020 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் விவசாயியாக இருந்து, இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டமுன்வடிவை அவையில் தாக்கல் செய்வதை மிகவும் பெருமையாகக் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை, இறைவனாகக் காட்சியளிக்கின்ற*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த பாக்கியமாக எண்ணுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதத்திற்கான பதிலுரை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) தமிழகத்தில் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெறாது என அறிவிக்க வலியுறுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த NPR கணக்கெடுப்பைப் பற்றி ஒரு சரியான முடிவு அரசிடமிருந்து வரும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.